# இனப்படுகொலைக்கான நீதி:

## 2009 இல் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கான இலங்கையின் பொறுப்பு

# முதன்மைச் சுருக்கம்

மே 18, 2009 அன்று தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (LTTE) இயக்கம் இலங்கையின் பாதுகாப்புப் படைகளால் தோற்கடிக்கப்பட்டதுடன் 26 வருடங்கள் என்ற நீண்ட காலப்பகுதியில் இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் உள்ள தமிழர் தாயகத்தில் ஒரு தனியான நாட்டை உருவாக்குவதற்காக LTTE ஒரு ஆயுத விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து வந்தது. ஐக்கிய நாடுகள் சபை மேற்கொண்ட இரண்டு விசாரணைகளில் இலங்கைப் படைகள் மற்றும் LTTE ஆகிய இரு தரப்பினரும் யுத்தக் குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களை இழைத்தது கண்டறியப்பட்ட போதும், ஐக்கிய நாடுகள் சபை இனப்படுகொலை தொடர்பில் தொடர்ச்சியாக மௌனம் காத்து வருகின்றது.

யுத்தத்தின் இறுதி ஐந்து மாதங்களிலும், அவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாத அத்துடன் இறந்து விட்டனர் எனக் கருதப்படும் தமிழ் மக்களின் எண்ணிக்கை 40,000 தொடக்கம் 169,796 என்ற பாரிய எண்ணிக்கைகளுக்கு இடையில் உள்ளது, மேலும் இதில் அதிகமான மனித உயிர்ச் சேதங்கள் அரச படைகளின் ஷெல் தாக்குதல்கள் காரணமாகவே ஏற்பட்டது. வட-கிழக்கின் வன்னிப் பிராந்தியத்தில் உள்ள உள்ள முள்ளிவாய்க்கால் என்ற கிராமத்தில் யுத்தம் முடிவுக்கு வந்தது. இந்த இறுதி மாதங்கள் “முள்ளிவாய்க்கால் படுகொலை” என அறியப்படுகின்றது.

2009 ஆம் ஆண்டு யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கு இலங்கை அரசாங்கமே காரணம் என்பதை இந்த சட்டச் சுருக்க ஆவணம் நிறுவுகின்றது. குறிப்பாக, இனப்படுகொலை உடன்படிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள ஐந்து இனப்படுகொலை செயல்களில் மூன்றுக்கு இலங்கை எவ்வாறு பொறுப்பாகின்றது என்பதை விளக்குகின்றது, அம்மூன்று செயல்களுமானவை; கொல்லுதல், தீவிரமான உடற் தீங்கை விளைவித்தல், அத்துடன் குழுவின் வாழ்க்கை நிலைகளில் அதன் பௌதீக அழிவைக் கொண்டு வருவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளல். இது இனப்படுகொலை நோக்கத்துடன், அதாவது அழிக்கும் நோக்கத்துடன், தரப்பு மீது ஏற்படுத்தல். இதில் இலக்கு வைக்கப்பட்ட “தரப்பாக” வன்னியில் உள்ள தமிழ் மக்கள் அமைந்திருந்தனர்.

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை இலங்கை தொடர்பாக மேற்கொண்ட இரண்டு விசாரணைகள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள், மற்றும் சர்வதேச ஊடகங்கள் என்பவற்றின் கண்டறிதல்கள் மற்றும் சான்றுகளை PEARL அமைப்பு பயன்படுத்துகின்றது, அத்துடன் “நியாயமான ஏதுக்கள்”, மற்றும் ஏனைய சூழமைவுகளில் இனப்படுகொலைகளை தீர்மானிக்க ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் விசாரணைகளில் பயன்படுத்தப்பட்ட நியமம் என்பவற்றின் அடிப்படையில் சட்டரீதியான முடிவுகளை இந்த அமைப்பு மேற்கொள்கின்றது.

## முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை

2000 ஆம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் LTTE அமைப்பு உச்சத்தில் இருந்த போது, வடக்கு கிழக்கின் 76% நிலப்பரப்பை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்து தமிழ் ஈழம் என்ற தனியான அரச கட்டமைப்பைக் கொண்டிருந்தது அத்துடன் வன்னிப் பிரதேசத்தின் கிளிநொச்சி அதன் தலைநகரமாக செயற்பட்டது. அதே வேளை, இலங்கை அரசாங்கம் LTTE அமைப்பைத் தோற்கடித்து, தனி நாட்டுக் கட்டமைப்பைத் தகர்த்து ஒன்றிணைந்த நாட்டை உருவாக்க முன்னெடுப்புகளை மேற்கொண்டது. அரசாங்கத்தின் கட்டுப்பாடு அதிகரித்து வர LTTE இன் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசப் பரப்பு சுருங்க ஆரம்பித்தது, இறுதியாக வன்னி மாத்திரம் LTTE அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ்க் காணப்பட்டது. செப்டம்பர் 2008 இல் வன்னியைத் தனது

கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவருவதற்காக அரசாங்கம் தனது இறுதி இராணுவத் தாக்குதலை ஆரம்பித்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் தகவல்களுக்கு ஏற்ப, 2009 இன் ஆரம்பத்தில் வன்னி யுத்த வலயத்துக்குள் கிட்டத்தட்ட 300,000 தமிழ்ப் பொதுமக்கள் முடக்கப்பட்டிருந்தனர். யுத்தத்தின் இறுதி மாதங்களில், அரசாங்கம் அல்லது/அத்துடன் அதன் ஆயுதப் படைகள் பின்வரும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட இனப்படுகொலை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன:

| **நடத்தை** | **இனப்படுகொலை செயல்(கள்)** |
|---|---|
| அரசாங்கத்தால் பிரகடணப்படுத்தப்பட்ட "யுத்த சூனிய வலயங்களில்" வேண்டுமென்றே ஷெல் தாக்குதல்களை நடத்தி குறைந்தது 40,000 தமிழ்ப் பொதுமக்களைக் கொன்றமை (இறுதி இரண்டு வாரங்களிலும் நாளொன்றுக்கு குறைந்தது 1,000 தமிழ்ப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்) அத்துடன் மேலதிகமாக 25,000-30,000 தமிழ்ப் பொதுமக்களைக் கடுமையாக காயப்படுதல் | • கொலை செய்தல்<br>• தீவிரமான உடல் அல்லது உளத் தீங்கை ஏற்படுத்தல் |
| வைத்தியசாலைகள், உணவு விநியோக வழிகள் மற்றும் ஏனைய மனித நேய விடயங்கள் மீது வேண்டுமென்றே ஷெல் தாக்குதல்கள் நடத்தல் | • கொலை செய்தல்<br>• தமிழ் மக்களின் பௌதீகக் கட்டமைப்புகளை பகுதியளவில் அழிக்கும் நோக்கில் வேண்டுமென்றே அவர்களின் வாழ்க்கை நிலைகளைச் சீர்குலைத்தல் |
| "பாரிய எண்ணிக்கையான தமிழ்ப் பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகளை (குறைந்தது நூற்றுக் கணக்கில்) பாலியல் வண்புனர்வு செய்தல் மற்றும் பாலியல் ரீதியாக சிதைத்தல். பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களில் "மிகக் குறைவானவர்களே புகாரளிப்பதால்" இந்த எண்ணிக்கை குறைவானதொரு மதிப்பீடாகும். | • தீவிரமான உடல் அல்லது உளத் தீங்கை ஏற்படுத்தல் |
| எண்ணற்ற தமிழ்ப் பெண் மற்றும் ஆண் கைதிகளை உடலியல் ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் சிதிதிரவதை செய்தல் | • தீவிரமான உடல் அல்லது உளத் தீங்கை ஏற்படுத்தல் |
| அத்தியாவசிய உணவு மற்றும் மருத்துவ வழங்கல்களுக்கான அணுகலை வேண்டுமென்றே மட்டுப்படுத்தல் | • கொலை செய்தல்<br>• தீவிரமான உடல் அல்லது உளத் தீங்கை ஏற்படுத்தல்<br>• தமிழ் மக்களின் பௌதீகக் கட்டமைப்புகளை பகுதியளவில் அழிக்கும் நோக்கில் வேண்டுமென்றே அவர்களின் வாழ்க்கை நிலைகளைச் சீர்குலைத்தல் |
| உள்ளக இடம்பெயர்வுக்கு ஆளான தமிழ் மக்களுக்கு மனிதாபிமானம் அற்ற சூழ்நிலைகளை ஏற்படுத்தல் | • தமிழ் மக்களின் பௌதீகக் கட்டமைப்புகளை பகுதியளவில் அழிக்கும் நோக்கில் வேண்டுமென்றே அவர்களின் வாழ்க்கை நிலைகளைச் சீர்குலைத்தல் |

*நீதிக்கமைவான அரச உறுப்புகள்* என்ற வகையில், இலங்கை அரசாங்கம் மற்றும் இலங்கை இராணுவத்தின் நடத்தை இலங்கை அரசுக்கு உரித்தானதாகும். அரச உறுப்புகள் இனப்படுகொலைச் செயல்களில் ஈடுபடும் சந்தர்ப்பங்களில், இனப்படுகொலைக்கான தனிப்பட்ட பொறுப்பைத் தீர்மானிக்காமல், இனப்படுகொலைக்கு ஒரு அரசு பொறுப்பாகுமா என்பதை மதிப்பிட முடியும். மியான்மர் மீதான ஐ.நா. சபையின் உண்மையைக் கண்டறியும் குழு, சர்வதேச குற்றவியல் நியாயாதிக்க எல்லைக்குள் இனப்படுகொலைச் செயல்கள் இனப்படுகொலை நோக்கத்துடன் செய்யப்பட்டனவா என்ற அனுமானத்தை அனுமதிக்கும் காரணிகளைக் கருத்தில் கொண்டு அவ்வாறு செய்தது.

இனப்படுகொலை நோக்கத்தின் அனுமானத்தை அனுமதிக்கும் இத்தகைய காரணிகள், ருவாண்டாவுக்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், முன்னாள் யூகோஸ்லாவியாவுக்கான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்புகளில் பயன்படுத்தப்பட்டதைப் போன்று சூழ்நிலை ஆதாரங்களின் வடிவத்தை எடுக்கலாம்.

வன்னியில் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசாங்கத்தின் நடத்தை மற்றும் இழைக்கப்பட்ட வன்முறைகள் என்பன இனப்படுகொலை நோக்கம் கொண்டனவாக அமைந்ததை பின்வரும் விடயங்கள் மூலம் ஊகித்து அறிந்துகொள்ளலாம்:

| **இனப்படுகொலை நோக்கத்தின் ஒவ்வொரு கூறையும் அனுமானிக்க உதவும் சர்வதேச நியாயாதிக்க எல்லைகளுக்குள் காணப்படும் சூழ்நிலைச் சான்றுகள்** | **இனப்படுகொலை நோக்கத்தின் கூறு** |
|---|---|
| • வன்னியில் விகிதசமமற்ற எண்ணிக்கையில் குவிக்கப்பட்ட படையினர் மற்றும் சிறப்புப் படைகள் (புலிகளின் அடிப்படைப் போராளிகளை விட குறைந்தது 14 மடங்கு அதிக எண்ணிக்கையானவர்கள்).<br>• வன்னித் தமிழ் மக்கள் மீதான தொடர்ச்சியானதும், ஒழுங்கமைக்கப்பட்டதுமான நடத்தை<br>• வன்னியில் வாழும் பெரும்பாலான தமிழர்கள் இராணுவத்தின் பாதுகாப்பிற்கு அச்சறுத்தல் ஏதுமில்லாத அப்பாவிக் குடிமக்கள் என்று நன்கு தெரிந்திருந்தும் வேண்டுமென்றே அவர்களைக் கொன்று குவிக்கும் எண்ணற்ற தாக்குதல்களை மேற்கொள்ளுதல்.<br>• வன்னியில் வாழும் பெரும்பாலான தமிழர்கள் இராணுவத்தின் பாதுகாப்பிற்கு அச்சறுத்தல் ஏதுமில்லாத அப்பாவிக் குடிமக்கள் என்று நன்கு தெரிந்திருந்தும் வேண்டுமென்றே வன்னி வாழ் தமிழர்களைப் புலிகளாகச் சித்தரித்து குழப்பம் விளைவித்தல் | • அழிக்கும் நோக்கம் |
| • இலங்கையில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது வன்னி வாழ் தமிழர்களின் எண்ணிக்கை மற்றும் வீதம் சார்பளவில் பெரியது<br>• அவர்களின் மூலோபாய முக்கியத்துவம் மற்றும் தமிழ் ஈழ தலைமை அவர்கள் மத்தியில் காணப்படுதல் (அதாவது புலிகளின் தலைமை) உள்ளடங்கலாக தமிழ் மக்கள் மத்தியில் வன்னியில் உள்ள தமிழர்கள் கொண்டுள்ள முக்கியத்துவம்<br>• அதிகரித்து வரும் உள்நாட்டு ஆயுத மோதல்கள் எதிர்ப்பு, எதிர்ப்பு கிளர்ச்சிகள், பயங்கரவாதத்திற்கெதிரான உலகலாவிய போர் எனும் போர்வையின் கீழ் இனப்படுகொலைகளை மேற்கொள்ளும் ஒரு வாய்ப்பு காணப்படுதல். இலங்கை இராணுவம் எடுத்த அத்தகைய நிலைப்பாட்டில் குறைந்தது 13% ஆனவர்களை அதாவது, அண்ணளவாக இலக்குவைக்கப்பட்டவர்களில் 57% ஆனோர் கொல்லப்பட்டமை (வன்னித் தமிழர்கள்) | • பகுதியில் (அல்லது பாரிய பகுதியில்) |
| • தமிழ் மக்கள் ஒரு பொதுவான மொழி மற்றும் கலாச்சாரத்தைப் பகிர்ந்து கொள்கினறனர், எனவே இனப்படுகொலைக்கு எதிரான சாசனத்தால் பாதுகாக்கப்படும் ஒரு “இனக் குழுவாக” அவர்கள் அமைகின்றனர் | • பாதுகாக்கப்பட்ட குழு அதாவது (அழிக்கப்படுவதற்கென்றே தெரிவு செய்யப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் என்ற காரணத்திற்காக தெரிவு செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்கள்) |

| | |
|---|---|
| • “யுத்த சூனிய வலயங்களில்” காணப்பட்ட பொது மக்கள் மற்றும் மனித நேய அம்சங்கள் மீது பாரிய அளவுகளில், பரந்ததாக, முறை சார் ரீதியான, தீவிரமான, பாரபட்சமற்ற, மற்றும் தொடர்ச்சியான ஷெல் தாக்குதல்கள், தொடர்து உருவாக்கப்பட்ட இவ்வலயங்கள் ஒவ்வொன்றும் முந்தைய வலயத்தை விட சிறியதாகவும் நெரிசல் மிக்கதாகவும் காணப்பட்டன<br>• யுத்த வலயத்துக்குள் செல்லும் உணவு, சத்திரசிகிச்சை மற்றும் ஏனைய மருத்துவ வழங்கல்களின் அளவை மட்டுப்படுத்துவதற்காக வேண்டுமென்றே பொது மக்களின் எண்ணிக்கையைக் குறைத்து மதிப்பீடு செய்தல்<br>• குறைந்தது 40,000 பொது மக்கள் கொல்லப்பட்டனர்<br>• இராணுவத்தினரின் பாதுகாப்பின் கீழ் வைக்கப்பட்டு இராணுவத்தினரால் நடத்தப்பட்ட முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருந்த உள்ளக இடம்பெயர்வுக்கு ஆளான 284,000 தமிழ் மக்கள் அம்முகாம்களில் காணப்பட அதி தீவிர சன நெரிசல், பாதுகாப்பற்ற நிலைகள் உணவு குடிநீர், துப்புரவு அல்லது தங்குமிட வசதிகளுக்கான போதிய அணுகல் இன்மை போன்ற மனிதநேய நெருக்கடியை எதிர்கொண்டனர் | |

## போருக்குப் பின்னரும் தொடரும் மனித உரிமை மீறல்கள் மற்றும் துன்புறுத்தல்கள்

உள்நாட்டுச் செயலற்ற தன்மை உட்பட வெற்றியளிக்காத சர்வதேச சட்ட முயற்சிகள், சிறப்பு நீதிமன்றம் இல்லாமை போன்றன சர்வதேச குற்றங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இலங்கைக் குற்றவாளிகள் தண்டனையிலிருந்து விலக்குப்பெறுவதற்கு வழிவகுத்தது. அத்தகைய தண்டனை விலக்கல் வடக்கு கிழக்கில் தமிழர்களுக்கு எதிரான அதாவது இனப்படுகொலையிலிருந்து உயிர் பிழைத்தவர்கள் உட்பட, தன்னிச்சையான கைதும் தடுத்து வைத்தலும் ,காணாமலாக்கப்படுதல், சித்திரவதை, பாலியல் வன்முறை, நினைவேந்தலை அனுசரிப்பதற்கு எதிரான அடக்குமுறை, கண்காணிப்பு, தொந்தரவு செய்தல் மற்றும் அச்சுறுத்தல் ஆகிய மனித உரிமை மீறல்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு இலங்கைப் படைகளுக்குத் துணிச்சலை அளித்துள்ளது. மேலும், வடக்கு - கிழக்கில் தொடரும் இராணுவமயமாக்கல் நில அபகரிப்பு மற்றும் இடம்பெயர்வுகளை நிரந்தரமாக்கியுள்ளது.

தமிழர்களுக்கு எதிராக அவர்களின் தமிழ் இனத்தின் அடிப்படையில் இந்த வன்முறைகளை இலங்கை செய்திருப்பதால், ஒவ்வொரு வன்முறையும் துன்புறுத்தலுக்கு சமமாகும்.

## பரிந்துரைகள்

இனப்படுகொலை அங்கீகாரம் என்பது பாதிக்கப்பட்டவர்கள், தப்பிப்பிழைத்தவர்கள் மற்றும் அவர்களது சந்ததியினர் அனுபவிக்கும் அசாதாரணமான தீங்குகளை பகிரங்கமாக ஒப்புக்கொள்வதற்கான ஒரு முக்கியமான வழியாகும் மற்றும் அதன் சொந்த உரிமையில் பொறுப்புக்கூறலின் முக்கிய நடவடிக்கையாகும். இலங்கையின் மனித உரிமை மீறல்கள் மற்றும் தமிழர்கள் மீதான துன்புறுத்தல்கள் மற்றும் குற்றவாளி அரசுகளின் இனப்படுகொலை மறுப்பு தலைமுறைகளுக்கிடையேயான அதிர்ச்சி மற்றும் அநீதி ஆகியவற்றில் வகிக்கும் பங்கைக் கருத்தில் கொண்டு இது மிகவும் முக்கியமானது.

கொள்கை வகுப்பாளர்கள் சர்வதேச நீதிமன்றங்களால் பயன்படுத்தப்படுவதை விட குறைவான சான்றுகளின் தரங்களின் அடிப்படையில் இனப்படுகொலை தீர்மானங்களை மேற்கொள்ளலாம் மற்றும் முன்னர் மேற்கொண்டிருக்கலாம். உண்மையில், கனடா, பிரான்ஸ், இத்தாலி, நியூசிலாந்து, இங்கிலாந்து மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் உள்ள கொள்கை வகுப்பாளர்கள் 2009 இல் தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலையை ஏற்கனவே அங்கீகரித்துள்ளனர். வஞ்சிக்கப்பட்ட இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் மற்றும் 2009 இல் தப்பிப்பிழைத்தவர்கள் சார்பாக அரசுகள் மற்றும் ஐக்கிய நாடுகள் அமைப்புக்கள் இலங்கையின் இனப்படுகொலைக்கு பொறுப்புகூறப்படுவதையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்கப்படுவதையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

அரசாங்கங்களின் பொருத்தமான பிரிவுகள் மற்றும் மட்டங்கள் பின்வருவனவற்றை மேற்கொள்ள வேண்டும்:

- இனப்படுகொலை தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.
- தொடர்புடைய சர்வதேச உடன்படிக்கைகளின் கீழ் சித்திரவதை போன்ற இனப்படுகொலைச் செயல்களுக்கு இலங்கை முறையாகப் பொறுப்பேற்க நடவடிக்கை எடுத்தல், இது சர்வதேச நீதிமன்றத்திடம் உரிமைகோருவதை உள்ளடக்கியதாகும்.
- தீர்மானங்களை அறிமுகப்படுத்துதல் மற்றும்/அல்லது ஆதரித்தல் மற்றும் சமூக ஊடகங்கள் உட்பட பகிரங்க அறிக்கைகளை வெளியிடுதல்:
    - 2009 ஆம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கு இலங்கையே காரணம் என்பதை அங்கீகரித்தல், மற்றும்
    - இனப்படுகொலை உட்பட சர்வதேச குற்றங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இலங்கைக் குற்றவாளிகளை விசாரிக்கவும், மிகவும் பொறுப்பானவர்களைத் தண்டிக்கவும் சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறையை ஸ்தாபித்தல்.
- தீர்மானத்தினை விபரித்தல் உட்பட, நிறைவேற்றுப் பிரிவிடமிருந்து இனப்படுகொலை நிர்ணயம் கோரும் மசோதாக்களை அறிமுகப்படுத்துதல் மற்றும்/அல்லது ஆதரித்தல்.

ஐக்கிய நாடுகள் அமைப்புகள், குறிப்பாக மனித உரிமைகளுக்கான உயர் ஸ்தானிகர் அலுவலகம் (OHCHR) மற்றும் அதன் இலங்கை பொறுப்புக்கூறல் திட்டமானது (OSLap) பின்வருவனவற்றை முன்னெடுக்க வேண்டு:

- ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் விசாரணைகள் இனப்படுகொலைக்கான தனிப்பட்ட பொறுப்பைத் தீர்மானிக்காமல், "நியாயமான ஏதுக்களின்" அடிப்படையில் இனப்படுகொலை நிகழ்வை பரிசீலித்து முடித்துள்ளமையைக் கருத்தில்கொண்டு இனப்படுகொலை குற்றச்சாட்டுக்களை அதன் ஆதாரங்களின் பகுப்பாய்வுகளில் வெளிப்படையாகக் கருத வேண்டும்,
- இனப்படுகொலை உட்பட சர்வதேச குற்றங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் இலங்கைக் குற்றவாளிகளை விசாரிக்கவும், மிகவும் பொறுப்பானவர்களைத் தண்டிக்கவும் ஒரு சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறையை நிறுவ ஐ.நா பொதுச் சபை மற்றும்/அல்லது ஐ.நா. பாதுகாப்பு பேரவையை வலியுறுத்த வேண்டும்